# யூன் – 04 - ஞாயிறு

## பரிசுத்த ஆவியானவர் பெரு விழா

## “உமது ஆவியை நீர் அனுப்ப, அவை படைக்கப்பெறுகின்றன“ - தி.பா 104 : 30

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 1 – 11

அக்காலத்தில், பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டு தலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது வானத்தின் கீழுள்ள அனைத்து நாடுகளிலுமிருந்தும் வந்திருந்த இறைப பற்றுள்ள யூதமக்கள் எருசலேமில் தங்கியிருந்தனர். அந்த ஒலியைக்கேட்டுக் கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக்கேட்டுக் குழப்பமடைந்தனர். எல்லோரும் மலைத்துப்போய், ”இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய்மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?” என வியந்தனர். பார்த்தரும், மேதியரும், எலாமியரும், மெசப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றவர்களும், பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேன் நகரையடுத்த லிபியாவின் பகுதிகளில் வாழும் மக்களும் உரோமையிலிருந்து வந்து தங்கி யிருந்தவர்களும், யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும், அரேபியரும் ஆகிய நாம் நம்மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக்கேட்கிறோமே!” என்றனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 12 : 3-7, 12-13

சகோதர சகோதரிகளே கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் ”இயேசு சபிக்கப்பட்டவர்” எனச் சொல்லமாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்டவரன்றி வேறு எவரும் ”இயேசுவே ஆண்டவர்” எனச் சொல்ல முடியாது. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அருள்கொடைகள் பலவகையுண்டு ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத் தொண்டுகளும் பலவகையுண்டு ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகையுண்டு ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. உடல் ஒன்றே உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். ஏனெனில், யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடி மக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்.

### நற்செய்தி : யோவான் 20 : 19 – 23

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்பகிறேன்” என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, ”தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா” என்றார்.

**தியானம்:** இன்றைய பெருவிழாவை கிறிஸ்தவம் மறுவாழ்வு அடைந்த நாள் என்று வாய்கூசாமல் கூறலாம். கிறிஸ்தவர்கள் பிறப்பதில்லை மாறாக பரிசுத்த ஆவியின் வல்லமையால் உருவாக்கப்படுகின்றார்கள். எங்களது வாழ்க்கை முறைகள் எப்படியிருப்பினும் பிறர் எம்மை மிகச்சிறியோராகக் கருதினாலும் எமது பரலோக தகப்பன் தமது ஆவியின் அன்பினால் நிறைவாக்குவார் என இன்றைய நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது.

இறைமகன் இயேசு பல்லாயிரம் தொகையினருக்குப் போதித்தார். அதிகம் பேர் “இவனைச் சிலுவையில் அறையும்” என்றார்கள். “அழைக்கப்பட்ட ஒரு சிலரோ” அன்னை மரியாவோடு “மேலறையில்” இருந்தார்கள். இவர்கள் இறைமகன் இயேசுவை ஜெத்சமெனியில் தனியேவிட்டு ஓடியிருப்பினும், தூய ஆவியின் வல்லமையால் தொடப்படுகின்றனர். அழைப்பின் குரல்கேட்ட திருச்சீடராகின்றனர். சமூகத்தில் கீழானவர்களாகக் கருதப்பட்ட திருச்சீடர்கள் ஒருமனப்பட்டு “மேலறையில்” கூடி இருந்ததால் இறைபார்வையில் “மேலானவர்களாகக்” கருதப்பட்டு ஆண்டவரது ஆவியார் அவர்கள்மீது “அக்கினி நாக்கு வடிவில்” இறங்கிவந்தார் என நற்செய்தி கூறுகின்றது. அன்று திருச்சீடர்கள் குறிப்பிட்ட ஒருசிலராக இருப்பினும் ஆவியானவரது வல்லமையால் இன்று கிறிஸ்தவம் பலகோடிக் கணக்கானவர்கள் மத்தியில் மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்படிப்பட்ட வலுவற்ற பாவிகள் எம்மையும் தமது ஆவியின் வல்லமையால் இறைமகன் தொடவிரும்புகின்றார். நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளே புதுப்படைப்புக்களாக மாறவேண்டும். அக்கினி நாக்கு வடிவில் இறங்கி வந்த அவ்வுயிர் தரும், உறுதியூட்டும் ஆவி நாம் ஒண்றுமில்லாத வெறும் களிமண்ணிலிந்து படைக்கப்பட்டபோதே (தொடக்கநூல்2:7) எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதே ஆவியானவர் நாம் பெற்றுள்ள திருவருட்சாதனங்கள் வழியாக நமக்குள்ளே வாசம் பண்ணுகின்றார். நமது நம்பிக்கையின் ஊற்றாகி, நமது தேவையில் உதவிடும் அன்புக்கரம் அவரே. நமக்குள்ளே நமக்காய் உருகி, உருகி ஜெபித்திடுபவர் அவரே. நமக்கு எல்லாமே அவரே. எனினும் இந்தமறைபொருள் உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாரா? அல்லது சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் மாத்திரம் நம்பிக்கை வைத்தவர்களாக வாழுவோமா? சிந்திப்போம். இறுதிக்காலம் இது என உணர்ந்து செயற்படுவோம்.